# DEPOSTITION OF WITNESS
# IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT MUNSIF, NAGERCOIL
# O.S. No. 53 of 2021

**வா.சா: 3**

பெயர் : கந்தசாமி

தந்தை பெயர் :

கிராமம் :

வட்டம் :

தொழில் :

வயது :

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the day of 23.09.2025.

**முதல் விசாரணை** :-

நான் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தற்போது அகஸ்தீஸ்வரம் வட்டம் வட்டாட்சியராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து கேட்கப்பட்ட ஆவணம் தர்மபுரம் வில்லேஜ் ரீசர்வே எண்.424/2 சொத்தினை பெயர் மாற்றம் செய்வதற்கு கொடுத்த செயல்முறை சம்மந்தமான உத்தரவு மற்றும் ஆவணங்களை தற்போது கொண்டுவந்துள்ளேன். **பட்டா மாறுதலின் உத்தரவு வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி சொத்து ஆவணங்கள்

அடிப்படையில் யாருக்கு உரிமைப்பட்டது என்றால் தற்போது பொன்னையா நாடார் மகன் ஐயாதுரைக்கு உரிமைப்பட்டது. ஐயாதுரைதான் முன்ஜன்மியிடம் இருந்து பெயர் மாற்றம் செய்வதற்காக மனு சமர்ப்பித்திருந்தார். மேற்படி மனுவுடன் ஐயாதுரை பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணம் எண்.3193/2018 மற்றும் வில்லங்க சான்றிதழ் கொடுத்தார். அத்துடன் சேர்த்து இதற்கு முன்பத்திரத்தையும் கொடுத்தார் என்றால் தெரியவில்லை. முன் பத்திர எண். 2586/1994 என்றால் ஆவணத்தில் முன்பத்திரமாக ஆவண எண். 1999/1957 குறிப்பிடப்பட்டுள்ளது. கிரய ஆவணம் எண்.3193/2018 ஆவணம் தற்போது கோப்பில் இல்லை.

சோமசுந்தரம் மற்றும் சுயம்பு ஆகியோரிடம் இருந்து ஐயாதுரை 04.10.2018 அன்று கிரய ஆவணம் எண்.3193/2018 ஆவணம் படி வாங்கினார். மேற்படி கிரய ஆவணத்தில் 9ம் பக்கத்தில் சொத்து விபரத்தில் மொத்தம் ரீசர்வே எண். 424/2 ல் 11 ஏருக்கு சமமான 27.17 சென்ட்றுக்கு 1100 சதுர மீட்டர் என்றும் மேற்படி புரயிடம் பழைய சர்வே எண்படி 1923 ஏ நம்பரில் 23 சென்ட்றும் பழைய சர்வே 1923 பி நம்பரில் 2 சென்ட்டும் சேர்ந்து ஒன்றாய் கிடப்பு மொத்தம் 25 சென்ட் என்பது கைவச அனுபோகத்தின் படியும் ரீசர்வே படியும் 27.17 சென்ட் என்பதாகும். சோமசுந்தரம் மற்றும் சுயம்புக்கு முன் ஆவணத்தின் படி ரீசர்வே எண். 424/2 ல் மொத்தம் 25 சென்ட் தான் உரிமைப்பட்டது. ஆகையால் மேற்படி 25 சென்ட் தவிர வேறு நிலத்தை குறித்து கிரயம் செய்ய இயலாது அவ்வாறு செய்யவேண்டும் என்றால் அனுபவ சான்று வேண்டும்.

25 சென்ட் என்பது 27.17 ஆகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது அவ்வாறு குழப்பமான ஒரு பத்திரத்தை பெயர் மாற்றம் செய்ய முன்னிலை படுத்தும் நிலையில் தாசில்தார் பட்டா பாஸ்புக் சட்டப்படி முன்விசாரணை மேற்கொள்ள வேண்டும். மேலும் விலைக்கு கொடுத்த

நபர் விலைக்கு வாங்கிய நபர் ஆகிய இரு நபர்களின் முன் ஆதாரங்கள் முன் பட்டா ஆகிய விபரங்கள் குறித்து விசாரணை மேற்கொண்டிருக்க வேண்டும். அதன் தொடர்ச்சியாக பல ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும். நான் தற்போது கொண்டுவந்துள்ள கோப்பில் மேற்படி விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதாக எந்த ஆவணமோ விபரமோ இல்லை ஏனென்றால் கணிணி வழியாக பட்டா மாறுதலின் போது விசாரணை மேற்கொள்ள பட்டிருக்கலாம். மேற்படி விசாரணைகள் அனைத்தும் பட்டா பாஸ்புக் ஆக்டின் படிதான் விசாரணை மேற்கொள்ள வேண்டும். கணிணி வழியாக பட்டா மாற்றப்பட்டதால் மேற்படி விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியமில்லை என்று எவ்வித சட்டமும் பட்டா பாஸ்புக் ஆக்டின் படி இல்லை.

தாசில் தார் பிரிவு 4 மற்றும் 10 ன் பிடி முழுமையாக விசாரணை மேற்கொள்ள வேண்டும். தாசில்தார் சம்மன் அனுப்பி யாரையும் விசாரித்ததாக கோப்பில் துலங்கவில்லை. ரீசர்வே எண்.424/2 ஐ சுற்றியுள்ள உரிமையாளர்கள் அனைவரையும் அழைத்து வழக்கு பட்டிகை சொத்தின் விஸ்தீரணம் மற்றும் எல்கைகள் குறித்து விசாரணை மேற்கொண்டு ஆவணங்கள் பெறப்பட்டு ஆவணப்படுத்த வேண்டும். அவ்வாறான நடைமுறைகள் பட்டா மாற்றம் பெற்ற உத்தரவில் துலங்காது. முன் பத்திர விஸ்தீரணத்தை விட அதிகமான விஸ்தீரணம் கொண்டு பட்டா மாற்றம் செய்யப்பட்டால் அது மேற்படி சொத்தின் சர்வே எண் மற்றும் எல்கையில் தாக்கம் ஏற்படுத்தும் என்றால் சரியல்ல. அவ்வாறு நான் கூறுவது பட்டாபாஸ்புக் சட்டத்திற்கும் சர்வே எண். மற்றும் எல்கை சட்டத்திற்கும் புறம்பானது என்றால் சரியல்ல. முன் பத்திரத்தைவிட கூடுதலாக நிலம் பதியப்பட்டு பட்டா மாற்ற கொடுத்திருக்கும் நிலையில் மேற்படி கூடுதல் இடம் குறித்து களஆய்வு மேற்கொண்டு அளவுகள் செய்து எல்கை திட்டப்படுத்தி தகுந்த உத்தரவுகள் பிறப்பிக்கப்பட வேண்டும்.

படிவம் 3 ன் படியான ஆவணங்கள் கொண்டு வரவில்லை. ரீசர்வே எண்.424/8 ன் கூட்டுப்பட்டா கொண்டுவந்துள்ளேன். **மேற்படி கூட்டு பட்டாவின் இணையவழி நகல் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

**<u>முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.</u>**